**செ. கு. எண்:156** **நாள் :23.11.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 23.11.2015

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 12.11.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆட்டந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. வரதன் என்பவரின் மகன் சின்னசாமி; பழவேற்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பூபாலன் என்பவரின் மகன் சேத்தப்பன்;

16.11.2015 அன்று அம்பத்தூர் வட்டம், திருமுல்லைவாயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் என்பவரின் மகன் மணிமாறன்;

17.11.2015 அன்று திருத்தணி வட்டம், சிறுகுமி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயக்குமார் என்பவரின் மகன் தர்ஷன்;

18.11.2015 அன்று அம்பத்தூரைச் சேர்ந்த திரு. சிவக்குமார் என்பவரின் மகன் ஹரீஷ் குமார்; பொன்னேரி வட்டம், வெள்ளிவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துராமன் என்பவரின் மகன் தணிகாசலம்;

–– ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

16.11.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், கதிர்வேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலசுந்தர் என்பவரின் மகன் கோவிந்தராஜ் மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டத்தைச் சேர்ந்த திரு. வேடியப்பன் என்பவரின் மகன் சிவா என்கிற சிவன் 16.11.2015 அன்று திருவள்ளூரில் மழை வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

20.11.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், ஏ. வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயபால் என்பவரின் மகன் சுந்தரராஜ் இடி, மின்னல் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **9** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**